# EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

Calender : **CC. 383/2016** **PW. 2**
Miscellaneous :
Preliminary Register :

STATEMENT OF WITNESS
Name : சுப்பிரமணியன்.
Father's Name : கருப்பன்.
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age : Date: 16.03.2021.

**முதல் விசாரணை** :-

நான் பாப்பாக்குடி காவல் நிலையத்தில் தற்போது தலைமை காவலராக பணிபுரிந்த வருகிறேன். நான் திருக்குறுங்குடி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்த போது 24.02.2016 ம் தேதி 19.45 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பேரில் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சமுத்திரம் அவர்களும் மாவடி - டோனாவூர் ரோட்டில் இமானுவேல் சர்ச் முன்பு லைட் வெளிச்சத்தில் வாகனத்தணிக்கை செய்து கொண்டிருக்கும் போது கிழக்கே இருந்து வந்த முருகன் வண்டி எண். TN.72.BZ.1608 பதிவு எண் கொண்ட வாகனத்தை ராமசாமி செந்தில் என்பவர் TN.74.V.4525 என்ற டி.வி.எஸ். ஸ்டார் டி.எல்.எக்ஸ். என்ற இரு சக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து வந்து நாங்கள் வாகனத்தணிக்கை செய்யும் இடத்தில் வாகனத்தை நிறுத்தி விட்டு எங்கள் பக்கம் வந்து எங்கள் ஊரில் வந்து வாகனத்தணிக்கை செய்யக் கூடாது, நாங்கள் லைசென்ஸ் , ஹெல்மெட் போடாமல் இருப்போம் என்று கூறி போலிஸ் என்றும் பார்க்காமல், அரசு வேலை செய்ய விடாமல், அசிங்கமாக தேவடியா மகனே, புண்டமகனே என்று பேசி வாகனங்களை எடுத்து கொண்டு சென்று விட்டார்கள். இது சம்பந்தமாக சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலையம் சென்று தனி அறிக்கை கொடுத்தார்கள். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

சிறப்பு உதவி ஆய்வாளர் கொடுத்த தனி அறிக்கையில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். தனி அறிக்கையில் எதிரிகளுடன் சேர்ந்து மற்றொரு அடையாளம் தெரிந்த நபரும் எங்களிடம் பிரச்சனை செய்ததாக குறிப்பிட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் ஆய்வாளரிடம் வாக்குமூலம் கொடுக்கும் போது எதிரிகள் 2 பேர் மட்டுந்தான் குற்றவாளிகள் என்று வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் எனது உயரதிகாரி என்பதால் அவர் உத்தரவிடும் காரியங்களை செய்ய வேண்டியது எனது கடமை என்றால் சரிதான். அதனாரல் தான் எதிரிகள் மீது ஆய்வாளர் உத்தரவின் படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் பா.ஜ.க. முக்கிய பிரமுகர்கள் என்றால் சரிதான். தனி அறிக்கை தாக்கல் செய்யும் போது எனக்கும், அ.சா.1க்கும் எதிரிகள் வந்ததாக கூறப்படும் இரு சக்கர வாகனங்களின் பதிவு எண் தெரியாது என்றால் சரிதான். வழக்கில் சொல்லப்பட்டுள்ள குற்றங்களை எதிரிகள் செய்யவில்லை என்றும், மேலதிகாரிகளின் உத்தரவின் பேரில் அவ்வாறு எதிரிகள் செய்ததாகவும், அவர்கள் வாகனத்தை சேர்த்தும் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் முரண்பட்டு சாட்சியம் அளித்திருப்பதால் எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.